25 FEB 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 13 வெள்ளிக்கிழமை (25 - 02 - 2000) VALAMPURI ஒலி: 68

10 MAR 2000

★ இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு

# சமாதானத்துக்கான திருப்புமுனை

# சகலகட்சிகளின்ஒத்துழைப்புதேவை

## யாழ். மக்களிடம் பேராயர் கெனத்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் நீண்ட நெடும் பயணங் களுக்குப் பின் ஒரு திருப்பு முனையில் நாம் நிற்கின்றோம்.

சமாதானத்துக்கான அறிகுறி ஒன்றும் தென்படுவதாகக் கருது கின்றேன். சகல தரப்பினரது ஒத்துழைப்பு இல்லாமல் நாட்டில் சமா தானம் மலர முடியாது என்பது வரலாறு தந்த உண்மையும் பாடமு மாகும்.

இவ்வாறு அங்கிலிக்கன் திருச் சபையைச் சேர்ந்த கொழும் புப் பேராயர் கென்னத் பெர்னான்டோ நேற்று வலம்புரிக்கு அளித்த விசேட செவ்வியில் தெரிவித்துள் ளார்.

கொழும்புப் பேராயர் கென்னத் பெர்னான்டோ மேலும் வலம்புரிக்கு தகவல் தருகையில் தெரிவித்திருப் பதாவது;

தென்னிலங்கை மக்கள் சமாதானமொன்றை அவாவி நிற்கின்றனர். யாழ். மக்க ளுக்குள் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் சமாதானம் மலர வேண்டுமென உவக்கி கொண்டிருக்கின்றார்கள்.

நீண்ட நெடும் பயணங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் இரத்தினபுரி ஆயர்கள்

## மல்கம் ரஞ்சித்; இராயப்பு நாளை லண்டன் பயணம்

(கொழும்பு)

நீதிக்கும், சமாதானத்துக் குமான அமைப்பின் தலை வரும் இரத்தினபுரி மாவட்ட ஆயருமான அதி வணக்கத் துக்குரிய மல்கம் ரஞ்சித், நீதிக்கும் சமாதானத்துக்கு மான உபதலைவரும் மன் னார் மறைமாவட்ட ஆயரு மான அதி வணக்கத்துக்குரிய இராயப்புயோசப்புஆகியோர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல்அமைப்பு சீர்திருத்த கோரிக்கைகளை

## ஐ. தே. கட்சி ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பிவைத்தது

(கொழும்பு)

அரசியல்அமைப்பு சீர்திருத் தம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி பின்வரும் அரசியல் அமைப்பு கோரிக் கைகளை முன்வைத்துள்ளது இந்தக் கோரிக்கைகள் நேற்று ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்கா குமாரதுங்கா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ உயரதிகாரிகள் பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் மூவருக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

இராணுவத்தின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல, மட்டக் களப்பு பிராந்தியத் தளபதி யும் பிரதித்தலைமை அதி

[6 ஆம்பக்கம் பார்க்க]

## கடற்றொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மீன்பிடித்தடை தொடர் பாக நேற்றும், நேற்றுமுன் தினமும் இராணுவ, கடற் படை அதிகாரிகளுடன் இடம் பெற்ற சந்திப்புத் தொடர் பாகக் கலந்துரையாடும் பொருட்டு குருநகர், பாசை யூர், கொழும்புத்துறை, அரி யாலைப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கங்க ளின் தலைவர், செயலாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவர் உயிரிழப்பு

திருமலை மாவட்டத்தில் 21 ஆம் திகதி ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந் துள்ளதாக புலிகள் அறிவித் துள்ளனர். அவரின் விபரம் வருமாறு.

★ லெப்டினன்ட் செங்கதிர் (இராசதுரை ஜெகநாதன்) திருமலை.

இரண்டாவது கட்டமாக

## யாழ். கடலில் மீன்பிடித்தடை நீக்கம் கடற்படையினருடன் ஜெகன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். கடல் நீரேரியில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப் பட்ட தடையை நீக்குவது தொடர்பாக யாழ். மாவட் டப் பாராளுமன்ற உறுப் பினரும் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பா ளருமான கே.வி. குகேந்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

கைதிகள் விடுதலைக்காக

## அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப் போவதில்லை

(வவுனியா)

வன்னியில் உண்ணாவிரத மிருக்கும் படையினரின் விடு தலை தொடர்பாக அரசாங் கம் எந்தவித நடவடிக்கை களையும் மேற்கொள்ளாது என அறிவித்துள்ளது.

உண்ணாவிரதமிருக்கும் படையினருக்கு தலைமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாநகர சபையின்

## நேற்றைய கூட்டத்தில் உறுப்பினர்கள் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் 2000ம் ஆண்டுக்கான முத லாவது கூட்டம் மாநகர முதல்வரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பிரதி மேயர் என். ரவிராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்பில் இளைஞர் வெடி பொருளுடன் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு கொச்சிக் கடையில் பத்துக் கிலோ கிராம் நிறையுள்ள வெடி மருந்துடன் நேற்று இரவு நீர் கொழும்பு பொலிஸாரினால் இளைஞர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்துகிளைமோர் ஒன்றும், அதனை வெடிக்க வைக்கும் கருவி, இரும்புத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில்கிரனேட் வீச்சு 2 கடற்படை வீரர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை கன்னியா சுடு நீர் கிணற்றில் குளிக்கச் சென்ற இரு கடற்படை வீரர் கள் புலிகளின் கிரனேட் வீச் சுக்கு இலக்காகி காயமடைந் துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று திரு மலையில் இடம் பெற்றது. கடற்படைவீரர்கள் இருவரும் கன்னியா சுடு நீர்க்கிணற்றில் குளிக்கச் சென்றபோதே இச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு

# பிரதமராட்சி ஏற்பட வேண்டும்

## ஐ. தே. கட்சி செயற் குழு தீர்மானம்

(கொழும்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிந்து பிரதமரை மைய மாகக் கொண்ட நிறை வேற்று முறையொன்று ஏற் படுத்தப்படவேண்டும் என்று புதனன்று நடைபெற்ற ஐ. தே. கட்சியின் பாராளுமன்றக் குழுவினதும் செயற் குழுவி னதும் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் கட்சித் தலைவர் ரணில்விக்கிரம சிங்கா தலைமையில் நடை பெற்ற மேற்படி கூட்டத்தில் மாத்தறை மாவட்ட எம்.பி. ரொனிடிமெல் சமர்ப்பித்த யோசனையின் பேரிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ள துடன் ஆறு அம்சங்கள் அடங் கியதாக அரசியலமைப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே!

JCI Computer Informatics

விஷேட கணனிப் பயிற்சி

பற்றிய விளம்பரப் பிரசுரம் வலம்புரியினுள்ளே வைக்கப்பட்டுள்ளது.

அதனை வாசகர்கள் பெற்றுக்கொள்ளவும்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு
சைவத் திருமுறைத்திரட்டு, திருக்குறள், திருவாசகம், சைவசமய நூல்கள் இருக்கின்றன. தொடர்பு க. இராசரத்தினம் 135, சிவன் கோவில் முன்பாக நல்லூர் யாழ்ப்பாணம்: நேரம்மாலை 2-00—6-00 (185)

## விதவைப் பெண்களுக்கு நிதி உதவி

மனித முன்னேற்ற நடு நிலையம் பதினாறு விதவைப் பெண்களுக்கு 5000 ரூபா உதவுதொகை வழங்கியுள்ளது;

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(அச்சுவேலி)

யாழ். ஆவரங்கால் மகாஜனாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1. 30 மணிக்கு அதிபர் ஏ. அருந்தவநேசன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர். சிவஞானசுந்தரம் இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (செ-57)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு அதிபர் கா. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர்ந. திரிலோகநாதன் இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக வலி. மேற்குக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா கலந்து கொள்கிறார்.

கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் அ. சுப்பிரமணியம் கலந்து கொள்கிறார். (செ)

★ ★ ★

(இளவாலை)

யா/இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியும், யா / இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பி. ப. 2 மணிக்கு கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி இரண்டு கல்லூரிகளினதும் அதிபர்கள் தலைமையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிக்கு வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ-12)

★ ★ ★

(பருத்தித்துறை)

செம்பியன் பற்று அ.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு அதிபர் வே. அம்பலவாணேசன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி சி. நந்தகுமார் இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக் கலந்து கொள்கிறார். (செ-11)

# மந்திகை ஆதார வைத்தியசாலையில் 2707 பேருக்கு மலேரியா நோய்

(பருத்தித்துறை)

மந்திகை ஆதார வைத்திய சாலையில் சென்ற வருடம் மேற்கொள்ளப்பட்ட இரத்தப் பரிசோதனையில், 2707 பேர் மலேரியா நோயாளர்களாக இனம் காணப்பட்டனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சென்ற வருடத்தில்11,183 நோயாளர்களுக்கு இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோதே 2707 பேர் மலேரியா நோயாளர்களாக இனம் காணப்பட்டனர்.

இதைவிட இப்பரிசோதனைகளின் பயனாய் 59 மூளை மலேரியா நோயாளர்களை ஆரம்பத்திலேயே இனம் கண்டு கொண்டதாகவும், இனம் காணப்பட்டவர்களில் அனேக நோயாளர் மந்திகை ஆதார வைத்திய சாலையிலேயே சிகிச்சை பெற்று வெளியேறி இருப்பதாகவும் மேற்படி வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் 687 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட இரத்த பரிசோதனை முடிவுகளில் எவருமே மூளை மலேரியா நோயாளராக இனம் காணப்படா விடினும், 128 பேர் சாதாரண மலேரியா நோய்க்கான சிகிச்சைகளை பெற்றுச் சென்றனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை—

மலேரியா, மூளை மலேரியா நோய்கள் இனம் காணப்பட்டவர்களில் பலர் துன்னாலை, மண்டான், கற்கோவளம், ஆகிய பகுதிகளைச் சார்ந்தவர்களாக இருப்பதுடன் இவர்களில் அனேகர் வன்னி சென்று திரும்பியவர்கள்என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. (க-11)

## தீவகத்தில் விளையாட்டுக் கழகம் அங்குரார்ப்பணம்

(அல்லைப்பிட்டி)

தீவகக் கல்வி வலய ஊர்காவற்றுறைக் கோட்ட விளையாட்டுக் கழகம் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் MSA ஒஸ்வால்ட் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

போஷகராக தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், தலைவராக புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் K. இரத்தின சிங்கம், உபதலைவர் மெலிஞ்சி முனை றோ. க. த. க. பாடசாலை அதிபர் V.A. சிவராசா செயலாளராக தம்பாட்டி அ. த. க, பாடசாலை அதிபர் K. சுந்தரலிங்கம், பொருளாளராக நாரந்தனை கணேசவித்தியாலய அதிபர் த. சத்தியதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் (க-46)

## உதை பந்தாட்டப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(புலோலி)

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடாத்தும் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை கழகத் தலைவர் கே. இரவீந்திரன் த்லைமையில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியிலே வதிரி டயமன் வி. கழகத்தை எதிர்த்து, கொற்றாவத்தை சிவானந்தா கழகம் மோதவுள்ளது. (செ-52)

## யாழ்.இந்து வெற்றி

(ஈச்சமோட்டை)

யாழ். இந்துக்கல்லூரி அணிக்கும்,ஸ்கந்தவரோதயக்கல்லூரி அணிக்கும்இடையில் இடம்பெற்ற துடுப்பாட்டத்தில்,இந்துக்கல்லூரிஅணி 'இனிங்ஸ்' ஆல்வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 244ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய ஸ்கந்த வரோதயக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 29ஓட்டங்களைப்பெற்றது.

2ஆம்சுற்றில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரிஅணிசகல இலக்குகளையும் இழந்து128ஓட்டங்களைப்பெற்று தோல்வியைத் தழுவியது. (செ-59)

## விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு இம் மாதம் 24 ஆம் திகதிவரை விமானப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக தரப் படுகின்றது.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 126198 ஏ | 126198 பி |
| 129825 ஏ | 129825 பி |
| 131249 ஏ | 131400 ஏ |
| 131413 ஏ | 131413 பி |
| 131413 சி | 131429 ஏ |
| 125476 ஏ | 125476 பி |
| 125476 சி | 131890 ஏ |
| 131890 பி | 131899 ஏ |

### நெடுந்தீவு

| | |
|---|---|
| 12103 ஏ | 12103 பி |
| 12506 ஏ | 12796 ஏ |
| 12796 பி | 12823 ஏ |
| 12879 ஏ | 12901 ஏ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 122818 ஏ | 122818 பி |
| 122818 சி | 122818 டி |
| 130244 ஏ | 130422 ஏ |
| 130422 பி | 130458 ஏ |
| 130473 ஏ | 13051 ஏ |
| 13051 பி | 132111 ஏ |
| 132120 ஏ | 132179 ஏ |
| 132179 பி | 132183 ஏ |
| 132186 ஏ | 132186 பி |
| 132186 சி | 132186 டி |
| 132204 ஏ | 132204 பி |
| 132204 சி | 132421 ஏ |
| 133428 ஏ | 133705 ஏ |
| 133705 பி | 136891 ஏ |
| 136916 ஏ | 136916 பி |
| 136922 ஏ | 136958 ஏ |
| 136962 ஏ | 136962 பி |
| 136971 ஏ | 136971 பி |
| 136971 சி | 136974 ஏ |
| 136974 பி | 136994 ஏ |
| 136994 பி | 136994 சி |
| 136998 ஏ | 136998 பி |
| 137001 ஏ | 137001 பி |
| 137001 சி | 137009 ஏ |
| 137026 ஏ | 137026 பி |
| 137026 சி | 137026 டி |
| 137026 ஈ | 137051 ஏ |
| 137051 பி | 137051 சி |
| 137069 ஏ | 137071 ஏ |
| 137071 பி | 137071 சி |
| 137073 ஏ | 137073 பி |
| 137073 சி | 137106 ஏ |
| 137111 ஏ | 137134 ஏ |
| 137147 ஏ | 137182 ஏ |
| 137182 பி | 137182 சி |
| 137213 ஏ | 137214 ஏ |
| 137218 ஏ | 137219 ஏ |
| 137220 ஏ | 137221 ஏ |
| 137225 ஏ | 137232 ஏ |
| 137232 பி | 137237 ஏ |
| 137251 ஏ | 137266 ஏ |
| 137294 ஏ | 137333 ஏ |
| 137333 பி | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 137638 ஏ | 137638 பி |
| 137638 சி | |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| 12394 ஏ | 12394 பி |
| 12394 சி | 12394 டி |
| 12466 ஏ | 12673 ஏ |
| 12673 பி | 12725 ஏ |
| 12736 பி | 12774 ஏ |
| 12789 ஏ | 12798 ஏ |
| 12798 பி | 12798 சி |
| 12810 ஏ | 12816 ஏ |
| 12816 பி | 12816 சி |
| 12816 டி | 12816 ஈ |
| 12816 எவ் | 12816 ஜி |
| 12816 எச் | 12816 ஐ |
| 12816 ஜே | 12824 ஏ |
| 12826 ஏ | 12839 ஏ |
| 12839 பி | 12843 ஏ |
| 12843 பி | 12844 ஏ |
| 12850 பி | 12850 சி |
| 12850 டி | 12850 ஈ |
| 12852 ஏ | 12855 ஏ |
| 12860 ஏ | 12865 ஏ |
| 12868 ஏ | 12871 ஏ |
| 12873 ஏ | 12873 பி |
| 12874 ஏ | 12874 பி |
| 12886 ஏ | 12889 ஏ |
| 12889 சி | 12889 எவ் |
| 12892 ஏ | 12893 ஏ |
| 12896 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 136109 ஏ | 136109 பி |
| 136109 சி | 137041 ஏ |
| 131854 ஏ | 135598 ஏ |
| 135598 பி | 135605 ஏ |
| 135705 ஏ | 135708 ஏ |
| 135708 பி | 135736 ஏ |
| 135736 பி | 135736 சி |
| 135807 ஏ | |

### பளை

| | |
|---|---|
| 131887 ஏ | 131292 ஏ |
| 131896 ஏ | 131896 பி |
| 131904 ஏ | 131904 பி |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 135214 ஏ | 135214 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 135944 ஏ | 135949 ஏ |
| 138151 ஏ | |

### வேலணை

| | |
|---|---|
| 12557 ஏ | 12721 ஏ |
| 12730 ஏ | 12730 பி |
| 12731 ஏ | 12731 பி |
| 12779 ஏ | 12779 பி |
| 12791 ஏ | 12792 ஏ |
| 12792 பி | 12792 சி |
| 12804 ஏ | 12804 பி |
| 12804 சி | 12804 டி |
| 12804 ஈ | 12805 ஏ |
| 12806 ஏ | 12806 பி |
| 12806 சி | 12806 டி |
| 12806 ஈ | 12825 ஏ |
| 12827 ஏ | 12828 ஏ |
| 12828 பி | 12830 ஏ |
| 12832 ஏ | 12833 ஏ |
| 12834 ஏ | 12834 பி |
| 12834 சி | 12835 ஏ |
| 12840 ஏ | 12840 பி |
| 12840 சி | 12841 பி |
| 12846 ஏ | 12847 ஏ |
| 12847 பி | 12848 ஏ |
| 12853 ஏ | 12853 பி |
| 12853 சி | 12854 ஏ |
| 12872 ஏ | 12872 பி |
| 12876 ஏ | 12876 பி |
| 12876 சி | 12876 டி |
| 12880 ஏ | 12891 ஏ |
| 12894 ஏ | 12895 ஏ |
| 12902 ஏ | |

## (இராசி பலன்)

25.02.2000
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு மாசி - 13)

ஷஷ்டி இரவு 10.02 வரை, சுவாதி பகல் 11.8 வரை, இராகுகாலம் பகல் 1.30 முதல் 2.58 வரை, சுபநேரம் காலை 7.00 முதல் 8.30 வரை சித்தயோகம்.

**மேடம்:** மேலோர் சகாயம், தொழில் சிறப்பு, மனஉறுதி.

**இடபம்:** புதியமுயற்சி, குடும்ப சிறப்பு, உல்லாசப் பயணம்.

**மிதுனம்:** மனக்கோட்டை, தொழில் நஸ்டம், அலைச்சல்.

**கடகம்:** வேண்டாத தொல்லை, மனக்குளப்பம், மறதி.

**சிங்கம்:** கல்வியில் சிறப்பு, ஆத்மதானம், பாராட்டு.

**கன்னி:** விபரீதம், கடன் சுமை, மனச்சுமை.

**துலாம்:** காரியசித்தி,புதிய வாய்ப்பு, வேதாந்தம்.

**விருச்சிகம்:** முதியோர்வேலை, உடல் உபாதை, ஏமாற்றம்.

**தனுசு:** அயலவர்சருணை, தொழில் வெற்றி, மனைவிபெருமை.

**மகரம்:** பொதுச்சிந்தனை, நண்பா அறிவுரை, தானதர்மம்.

**கும்பம்:** தாயார்கோபம், குளம்பித்தெளிதல், வழித்தொல்லை.

**மீனம்:** குடும்பவிரக்தி, அனாவசிய செலவு, வாக்குப்பகை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு
அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

**திருமதி கோமளா திருநாவுக்கரசு**

அவர்களின் சிரேஷ்ட புதல்வனும்
யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவனுமாகிய

**திரு. திருநாவுக்கரசு சுதர்சன்**

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரது தாங்கொணா இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களும்
நலன்புரிச் சங்க உறுப்பினர்களும்
கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(கி/93)

நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## இலங்கை திறந்த பல்கலைக் கழக

## பட்டமேல் கல்வி டிப்ளோமா சித்தியடைந்தோர் விபரம்

திரு. என். சரவணபவன் 3சி, பி, திரு. என். நல்லநாதன் 2சி, பி, ஏ, திரு. ஜி. உருத்திரா கரன் 3சி, ஏ செல்வி பி. மலர்மகள் 3சி, டி செல்வி ரி. சறோசா 2பி, 2சி

திரு. ஈ. கிருஷ்ண ராசா 2சி, பி, ஏ திரு. எஸ். சரச்சந்திரன் 2சி, பி, ஏ திரு. எம். சரவண பவ ஐயர் 3பி, சி செல்வி எஸ். ஜெகதீஸ்வரி அம்மா 2சி, டி, பி திருமதி ஆர். வதனா 3டி, பி

திரு. என். யோகராசன் 2சி, 2டி திரு. எஸ். விஜயநாதன் பி, டி, 2சி திரு. வி. றெசிகுமார் பி, 2சி, டி திரு. கே. அன்ரன்டயஸ் 2சி, எவ், டி செல்வி கே. குமுதினி 3பி, சி

திருமதி சீ. ஜே. ஜெயசீலன் 2டி, பி, சி செல்வி எஸ். தேவா 3சி, பி செல்வி ரீ. கிருவாகினி டி, 2சி, பிசெல்வி வி. கிருஷ்ணப்பிள்ளை 3சி, ஏ செல்வி எஸ். தவராணி பி, 3சி

திருமதி எஸ். ஜெயந்தகுமாரி 2பி, 2சி திரு. கே. சைவஇறைமணி 2சி, பி, டி திரு. ஆர் இராசலிங்கம் சி, 2டி, பி திரு. வி. சுந்தரேசன் 2சி, 2டி திரு. கே. ஜெயந்தா 3சி, பி திரு. கே. சண்ணன் 2சி, ஏ, பி செல்வி கே. சுசீலராணி 2எவ், பி, டி

கல்விக் கோட்பாடுகள், கல்வி உளவியல், மதிப்பீடு அளவிடலும், மாணவர் பொருத்தப்பாடும் ஆலோசனை கூறலும் என்னும் பாட ஒழுங்கின்படி பெற்ற தரங்கள் தரப்பட்டுள்ளன.

## ரூபா 75 ஆயிரம் செலவில் குடத்தனை நூலகம் புனரமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபையின் குடத்தனை பொதுசன நூலகம் சுமார் 75,000 ரூபா செலவில் திருத்தி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது, இதற்கான நிதியை பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் திரு. ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் பிரதேச சபைநிதியிலிருந்து ஒதுக்கீடு செய்திருந்தார்.

அத்துடன் குடத்தனைவீதியும் மதகும் சுமார் $2\frac{1}{2}$ இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி விஷேடமூலதன நிதியிலிருந்து யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

குடத்தனை ஆலிலடிவீதியும் 80,000 ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியும் பருத்தித்துறை பிரதேச சபைநிதியிலிருந்து தலைவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (க-52)

## விடுமுறைநாளில்கடைகளைப் பூட்டி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### யாழ். வணிகர் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

விடுமுறை தினங்களில் கடைகளை பூட்டி பூரணஒத்துழைப்பு வழங்குமாறு சகல வர்த்தகர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்கண்டவாறு யாழ். வணிகர் கழகத்தினால் யாழ். நவீன சந்தை மேல்மாடியில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய உறுப்பினர்ஒருவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வறியமக்களுக்கு உதவுவதற்காக தர்ம நிதியம் அமைக்கப்பட வேண்டுமென ஆலோசனையும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு வரவு செலவுதிட்ட அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது.

உறுப்பினர்கள் விபரம் வருமாறு; தலைவர்; நற்குணராசா; செயலாளர்; க. வி. குலரத்தினம், பொருளாளர், மு. தர்மராசா; இவர்களுடன் நிர்வாகசபை உறுப்பினர்கள் 14 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (க-03)

## கலாச்சார சீரழிவை தடுக்கவும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமயத்தவர் வசிக்கும் நமது பாரம் பரிய (சிவபூமி) பிரதேசங்களில் சமய கலாச்சார சீர்குலைவுகள் வெகுவாக அதிகரித்து வருவதாகவும் இதனை தவிர்க்கும் முயற்சியில் சமூக, சமய நிறுவனங்கள் ஈடுபட வேண்டுமென யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயலர் சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

தற்போது கலாச்சாரச் சீர்குலைவுகளாக இடம் பெறும் பாலியல் வன்முறைகள், மதுபான விற்பனைகள், பசுவதை, ஆலயங்களில் உயிர் பலியிடுதல், இறைச்சிக்கடைகள் போன்ற விரும்பத்தகாத செயல்கள் நடைபெற்று வருவது கண்டிக்கப்பட வேண்டியது என்றார். (க)

## 'பாஸ்' நடைமுறை குறித்து விரைவில் அமைச்சருடன் பேச்சு நடத்தப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுலுக்கு வரவுள்ள பாஸ் நடைமுறை குறித்து ஓரிருதினங்களில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை பாராளுமன்றில் சந்தித்து பேச்சுநடத்த உள்ளதாக தபால் தொலைத் தொடர்புகள் தொடர்புசாதன பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

பாஸ் நடைமுறை குறித்து இதுவரை எவ்வித உத்தியோக அறிவித்தலும் கிடைக்கவில்லை, பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடன் பேசிய பின்னரே அதுதொடர்பானமுடிவுகள் எடுக்கப்படும் என பாஸ் நடைமுறைகுறித்து தெரிவித்தார். (க-60)

## அளவெட்டியில் சிரமதானம்

அளவெட்டிக் கிழக்குகிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் அப்பகுதியின் பிரதான இரு ஒழுங்கைகள் சிரம தானப் பணி மூலம் சீர் செய்யப்பட்டது.

இந்தப் பணிக்கு அப்பகுதியில் வசிக்கும் க. நல்லையா என்பவர் தனது வாகனத்தை இலவசமாக தந்துதவியதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் செ. யோ. கொட்வின் தெரிவித்துள்ளார். (க)

## ஸ்பெயின் முக்கிய அரசியல்வாதி கார்க் குண்டு வெடிப்பில் பலி

(மட்றிட்)

ஸ்பெயின் நாட்டு முக்கிய அரசியல் வாதியும் அவரது மெய்ப்பாதுகாவலரும் கார்க் குண்டு வெடிப்பு சம்பவம்ஒன்றில் பலியாகினர்.

ஸ்பெயின் சோசலிசக்கட்சி செயலாளர் பெர்னான்டோ கூட்ஸாவும் அவரது மெய்ப்பாதுகாவலருமே பலியானவர்களாவர்.

ஸ்பெயின் முக்கிய நகரான விக்ரோறியாவில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளாகம் ஒன்றிலே இடம்பெற்ற இக் குண்டுவெடிப்பு தொடர்பாக இதுவரை எவரும் உரிமை கோரவில்லை எனக் கூறப்படுகிறது.

இருப்பினும், ஜீ. ரி. ஏ. எனப்படும் தீவிரவாதகுழுவே இக் குண்டுவெடிப்புக்குக் காரணமாக இருக்கலாம் என ஸ்பெயின் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகளால் அரசியல் தலைவர்களது உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் எனக்கருதி முன்கூட்டியே அவர்களுக்கு மெய்ப்பாதுகாப்பினை அந்நாட்டு அரசு உறுதி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்படுகொலைச்சம்பவத்தினை எதிர்த்தும், மேற்படி தீவிரவாதிகளைக் கண்டித்தும் மிகப்பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை விக்டோரியா நகரில் பொதுமக்கள் நடாத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது. (க-9)

## கொலை சூத்திரதாரி பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டார்

(இஸ்லாமபாத்)

நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தி கொலை செய்த சம்பவத்தின் சூத்திரதாரி அண்மையில் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஜாவெட் இக்பால் என்னும் கொலைஞனே மேற்படி கொடூரச் செயல்களை புரிந்துள்ளதாக தெரிய வருகிறது.

லாஹூரின் சேரிப்புறம் ஒன்றில் கொலைஞனின் வீட்டிற்குள்ளிருந்து அஸிட் நிரப்பப்பட்ட கொள்கலன்களில் இருந்து 3 சிறுவர்களின் அழுகிய சடலங்களை மீட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளையில் மேற்படி கொலைச் சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட வேளையில் பலாத்காரமான முறையில் மேற்குறிப்பிட்ட முறைப்பாடுகள் பொலிசாரால் பெறப்பட்டதாகக்கூறப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

## தேசவிரோத சக்திகளை ஒடுக்குவதில் பொதுமக்களும் உதவவேண்டும்

### எல். கே. அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் தொடரும் வன் செயல் சம்பவங்கள் மற்றும் விமானக் கடத்தல் சம்பவங்களை உற்று நோக்கும்போது இச்சம்பவங்களின் சூத்திரதாரிகளிடையே நெருங்கிய தொடர்பு நிலவுகின்றமையை அவதானிக்க முடிகிறது என மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் சி. பி. ஐ. ஏற்பாடு செய்த இரண்டு நாள், குற்றங்கள் பற்றிய தேசிய மகாநாட்டைத் தொடக்கி வைத்துப்பேசிய மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வாணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசியதாவது; தேசவிரோதக் கும்பலின் செயற்பாடுகளை ஒடுக்குவதில் பொலிஸார் மட்டுமல்லாது, சமுதாயம் முழுவதுமே விழிப்போடு இருக்கவேண்டும்.

இதுபோன்ற பயங்கரவாத குற்றங்களுக்கு உதவி அளித்து தூண்டிவிடுவதில் பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ. எஸ். ஏயும் முனைப்பாக செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்தியாவிற்கு இரு விமானங்கள் கடத்தப்பட்டதும் இக்கடத்தல் நாடகத்தின் பின்னணியில் பாகிஸ்தான் தீவிர வாதிகள் செயற்பட்டு வருவதாக இந்திய தரப்பில் குற்றம் சாட்டப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே. (க)

## கொசோவாவின் மிட்ரோவிக்கா நகரில் நேட்டோ படைகள் குவிப்பு

(பெல்கிரேட்)

கொசோவாவின் மிட்ரோவிக்கா நகரில்நேட்டோபடைகள் அதிகளவில் குவிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொசோவாவில் சமாதானப்பணியில் ஈடுபட்டுள்ள நேட்டோபடையில் அங்கம் வகிக்கும் அமெரிக்கப் படையினர் மீதுபொதுமக்கள் தாக்குதல் நடாத்தியதை அடுத்தே மேற்படி படைக்குவிப்பு இடம்பெற்று வருவதாக தெரியவருகிறது.

சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்தோர் எனச்சந்தேகிக்கப்படும்அல்பேர்னியர்வீடுகளுக்கு, சோதனையிடச் சென்றநேட்டோபடையின் அமெரிக்கப்பிரிவினர், மக்களிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதை அடுத்து.

ஆத்திரமடைந்த மக்கள் படையினர் மீது கற்களை எறிந்து தாக்குதல் நடத்தியதையடுத்து அங்குபதற்ற நிலைமை தொடர்ந்து நிலவி வருகிறது. (க-9

## கிளிங்டன் பாகிஸ்தான் சென்றால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்

### சி. ஐ. ஏ. எச்சரிக்கை

(வோஷிங்டன்)

மார்ச் மாதம் தெற்காசிய விஜயம் மேற்கொள்ளவுள்ள அமெரிக்க அதிபர் பாகிஸ்தானுக்குச் செல்வாரானால் அவரது உயிருக்கே ஆபத்து ஏற்படலாம் என அமெரிக்க உளவு அமைப்பான சி. ஐ. ஏ. எச்சரிக்கை விடுத்துள்ளது.

மார்ச்மாதம் அமெரிக்க அதிபர் பில்கிளிங்டன், இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளுக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளதும் அத்திட்டத்தில் பாகிஸ்தான் நாடு இணைத்துக் கொள்ளப்படாதது குறித்து பலதரப்பட்ட வாதப் பிரதிவாதங்கள் உலக அரங்கில் தோன்றியுள்ளன.

பாகிஸ்தானுக்கு கிளிங்டன் விஜயம் மேற்கொள்ளகூடாது என இந்திய சார்பு நாடுகளும் கட்டாயம்அங்கு செல்லவேண்டும் என்று பாகிஸ்தான் சார்பு நாடுகளும் கோரிக்கைகளை விடுத்தவண்ணம் உள்ளன.

இருப்பினும் கிளிங்டன் பாகிஸ்தான் நாடு செல்வாரா இல்லையா என்பது பற்றிய திடமான எந்தவோர் முடிவையும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் இன்னமும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

## மடகஸ்காரில் சூறாவளி அனர்த்தம் 7 பேர் பலி! சொத்துக்கள் சேதம்

(அன்டனிவோவ்)

மடகஸ்காரில் தலைநகரில் அண்மையில் வீசிய கடும் சூறாவளி அனர்த்தத்தில் பொதுமக்கள் தரப்பில் 7 பேர் பலியாகியுள்ளதுடன், பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன.

இந்து சமுத்திரம் ஊடாக இச் சூறாவளிக் காற்று மிக வேகத்துடன் வீசிய தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சூறாவளி அனர்த்தம் முற்றிலும் நீங்கவில்லை என்றும் மேலும் இவ் அனர்த்தம் தொடரலாம் எனவும் காலநிலை அவதான நிலையம் எச்சரிக்கைவிடுத்துள்ளது. (க-9)

யாழ். குடாநாட்டில்

# தற்காலிகமாக மூடப்பட்ட நிலையில் 58 பாடசாலைகள் உள்ளன

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மொத்தமாகவிருக்கின்ற 503 பாடசாலைகளில் 58 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்ட நிலையில் இருக்கின்றன. தற்போது மொத்தமாக 445பாடசாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன.

இவற்றில் 389 பாடசாலைகள் அவற்றுக்குச் சொந்தமான இடங்களிலும் 12 பாடசாலைகள் தனியார் நிலங்களிலும் 35 பாடசாலைகள் வேறு பாடசாலைகளுடன் இணைந்தும் 9 பாடசாலைகள் தற்காலிகமான கட்டடங்களிலும் இயங்கி வருவதாகத் தெரிய வருகின்றது.

குடா நாட்டில் கல்விசார் செயல்பாடுகள் திருப்திகரமாக இருக்கவில்லை என இப்பகுதியில் வாழ்கின்ற கல்விமான்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த வகையில் குடாநாட்டில் இருக்கின்ற இடைநிலை பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் விசேடமாக விஞ்ஞான பாடங்களைப் பயில்பவர்கள் முழுமையான செயல் முறைப் பயிற்சிகளைப் பெறக்கூடிய வசதியும் வாய்ப்புகளும் இப்பாடசாலைகளில் இல்லாமல் இருக்கின்றன.

விஞ்ஞான கூடங்களில் செயல்முறைப் பயிற்சிகளைச் செய்வதற்கு போதிய உபகரணங்கள் அங்கு இல்லாமல் இருப்பது பற்றியும் அறியப்படுகின்றது. அத்துடன் இவற்றுக்கான இரசாயன வகைகளும் இல்லாமல் இருக்கின்றன.

இந்த நிலையில் விஞ்ஞான பாடங்களை க. பொ. த (சா/த) க. பொ. த (உ/த) வகுப்புகளில் கற்கும் குடா நாட்டு மாணவர்கள் நாட்டின் ஏனைய பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி பயில்கின்ற மாணவர்களிடம் இருந்து வேறுபட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. (க-77)

## முதல்கந்தாயத்துக்கான மருந்து விநியோகம்

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட அரச வைத்தியசாலைகளுக்கான இரண்டாயிரம் ஆண்டின் முதலாவது கந்தாயத்துக்கான மருந்து விநியோகம் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக தீவகப்பிரதேசத்தில் மருந்துப் பொருட்கள் இன்று வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படவுள்ளதாக பிராந்திய மருந்து விநியோகப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

முதல்கந்தாயத்துக்கான இறுதிக்கட்ட மருந்துகள் வெள்ளிக்கிழமையன்றே கொழும்பிலிருந்து எடுத்துவரப் படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (வ 78)

## இலங்கையில் 43 இலட்சம் சிறுவர்கள் தொழிலாளர்களாக பணிபுரிகின்றனர்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள, 5 இற்கும் 14 இற்கும் இடைப்பட்ட வயதையுடைய 43 இலட்சம் சிறார்களில் 25 வீதமானவர்கள் தொழிலாளர்களாக இருப்பதாக சிறுவர் உரிமை தொடர்பான ஆய்வு நிறுவனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் அமுலில் உள்ள சிறுவர் தொடர்பான சட்டதிட்டங்களின் படி 11 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களை தொழிலாளர்களாக வேலைக்கமர்த்த முடியாது.

எனினும் 5 வயதான சிறார்கள் பலர் வீட்டுப்பணி புரிவதிலும் வேறு தொழிலகங்களில் வேலைக்கும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கையில், பாடசாலை செல்லும் வயதையுடைய இளஞ்சிறார்களில், 20 வீதமானவர்கள் வேலைகளுக்குச் செல்லும் பொருட்டும் 12 வீதமானவர்கள் வறுமை காரணமாகவும் கல்வியைத் தொடராத நிலை காணப்படுகிறது.

மேலும் 19 ஆயிரத்து 110 சிறார்கள் வீட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவ் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

எலும்புகள் கண்டு பிடிக்கப்பட்டு

## மரணச் சடங்குகள் நிறைவேறிய பின்னர் பாது. அமைச்சரிடமிருந்து கடிதம்

### மகனை கண்டு பிடியாமைக்கு வருந்துகிறோம்

(யாழ்ப்பாணம்)

செம்மணிப்புதைகுழி விவகாரத்தின் முக்கிய சாட்சியான லான்ஸ்கோப்ரல் சேமரத்ன ராஜபக்ஷவின் சாட்சியத்தை அடுத்து அடையாளம்காணப்பட்டு மரணச்சடங்கு நடந்தேறிய பின்னர் உங்கள் மகனை தேடித்தர முடியாமைக்கு மனம்வருந்துகிறோம் என்று பாதுகாப்பு அமைச்சரின் கடிதம் கிடைத்தது.

இவ்வாறு வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமல்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கச்செயலாளர் சற்குணம் தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரியில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்ட செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட தடயப் பொருள்கள் தொடர்பாக பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது,

ஆடைகள் மூலம் அடையாளம் காணப்பட்ட சுமதி என்பவரின் பிள்ளைகள் கூழும் கஞ்சியுமே குடித்துவருகிறார்கள். அவர்களின் பேத்தியார் கூலி வேலைசெய்தே இவர்களை பராமரித்து வருகிறார்.

இப்பிள்ளைகளை அநாதை பாடசாலையில் சேர்க்க முயற்சி எடுத்தபோதும் அவர்களின் தாய் தந்தையரின் மரணச்சான்றிதழ் கேட்கப்படுகிறது எனவே காணாமற்போனோர் தொடர்பாக அமைச்சர் கேட்டபோது பரிசீலனை செய்துவருவதாகவே பதில் தரப்படுகிறது.

இதனால் ஒவ்வொரு பெற்றோரும் அடையாளம் காணும் விடயத்தில் ஆர்வத்துடன் கலந்து கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களுக்கும் அடையாளம் காணப்படாதவர்களுக்கும், ஒருவருக்குமே மரணச் சான்றிதழ் வழங்கப்படவில்லை.

இதுபற்றி அரசுக்கு பல கடிதங்களை எழுதியிருக்கிறோம் இரகசியப் பொலிஸாருக்கும் அறிவித்திருக்கிறோம், தமிழ்க்குழுக்களுக்கும் அறிவித்திருக்கின்றோம் இப்பொழுதும் கூட பரிசீலனை செய்து கொண்டிருப்பதாக கூறுகிறார்களே தவிர இதில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதாக தெரியவில்லை.

இறந்தவர்களுக்கு மட்டும் மரணச் சான்றிதழ் வழங்காமல் காணாமல் போன சகலருக்கும் நிவாரணம் வழங்குவதா என்று தான் எமது அமைப்பிடம் கேட்கிறார்கள் புதைகுழிகளில் மீட்கப்பட்ட 16 பேருக்கும் நடக்க வேண்டியவைகள் நடந்துமிகுதிப்பேருக்கு என்ன நடந்தது எனத் தெரியும்வரை ஒரு சிலருக்கு மரணச்சான்றிதழ் வழங்குவதையோ நிவாரணம் வழங்குவதையோ ஏற்றுக்கொள்ள யாழ்ப்பாணத்திலுள்ள காணாமற்போனோரின் பெற்றோர்கள் தயாராக இல்லை.

இது விடயத்தில் எமது அதிருப்தியை அரசிற்கும் பாது காப்பு அமைச்சுக்கும் அறிவித்து வந்த எமது அமைப்பு நீதித்துறையிடம் தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்யவும் ஆலோசித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

## ஒருதொகுதி மருந்துகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகளில் ஒருதொகுதி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்கப்பல் மூலம், 3லொறிகளில் எடுத்து வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-1)

## புதிய பாடசாலை ஆரம்பம்

(புலோலி)

பருத்தித்துறை தும்பளை கிழக்கு மகளிர் கிராமஅபிவிருத்திச் சங்கம் புதிய பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இப்பாலர் பாடசாலைக்கு 'தும்பளை உதய சூரியன் பாலர் பாடசாலை' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இப்பாலர் பாடசாலைத் திறப்பு விழா தும்பளை கிழக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் ங்சகத் தலைவர் திரு. எம். நவரத்தினராஜா தலைமையில் நடைபெற்றது.

## சுக்கிரவார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீகதிரமலைச் சிவன் தேவஸ்தான சுக்கிரவார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்குநடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனை, வசந்தமண்டப பூஜை என்பவற்றைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறும்.

தொடர்ந்து 5.30மணிக்கு சமயச்சொற்பொழிவும்இடம் பெறவுள்ளது. (செ-01)

## க. பொ. த. உயர்தரத்திற்கான பொது அறிவு வினாவிடைகள் இல - 02

★ உலகில் பெரியன.

(1) மிகப்பெரியவைரக்கல் சுரங்கம் — கிம்பலி தென்ஆபிரிக்கா)
(2) மிகப் பெரியசிலை — நியூயோக்கிலுள்ள சுதந்திர சிலை
(3) மிகப்பெரியபுத்தகம்— சுப்பர்புக் (அகலம் 270 Cm நீளம் 300Cm, நிறை 252Kg)
(4) மிகப் பெரிய பள்ளிவாசல் — ஷாபைசால் பள்ளி வாசல் (இஸ்லாமபாத்)
(5) மிக பெரிய மாளிகை — வத்திக்கான் மாளிகை (றோம்)

★ நாடுகளும் அவற்றின் தேசிய பறவைகளும்.

(6) இந்தியா — ஆண்மயில்
(7) டென்மார்க் — வானம்பாடி
(8) இங்கிலாந்து — ரொபின்
(9) கனடா — வாத்து
(10) பெல்ஜியல் — செஸ்ட்ரஸ்

★ நாடுகளும் தலை நகரங்களும்.

(11) ஆப்கானிஸ்தான் — காபூல்
(12) இந்தோனேசியா — ஜகார்த்தா
(13) சீனா — பீக்கிங்
(14) நேபாளம் — தைப்பி
(15) ஈரான் — டெஹ்ரான்

★ பிரபல நூல்களும் எழுத்தாளர்களும்.

(16) இலியம் — கோமர்
(17) குடியாட்சி — பிளாற்றோ
(18) ஒரு உலகம் -- வென்டஸ்வில்கி
(19) சீராப்புராணம் — உமுறுப்புலவர்
(20) சத்திய சோதனை — மகாத்மா காந்தி

★ சர்வதேச தினங்கள்.

(21) உலக சமாதான நாள் — ஜனவரி 1
(22) உலக வள தினம் — மார்ச்21
(23) சர்வதேச தொடர்பாடல் தினம் — மே. 17
(24) எழுத்தறிவு நாள் — செப்ரெம்பர் — 8
(25) உலக உணவு தினம் — ஒக்ரோபர் 16

★ கண்டுபிடிப்புக்களும் கண்டுபிடிப்பாளர்களும்

(26) பிராணவாயு — பிறிஸ்லி
(27) குருதிச்சுற்றோட்டம் — வில்லியம் கார்வே
(28) டைனமைற் — அல்பிரப் நோபல்
(29) துவிச்சக்கரவண்டி — பற்றிக் மக்மியன்
(30) டீசல் இயந்திரம் — டீசல்
(31) யாழ்ப்பாணத்தில் முதல் முதல் தமிழ் அகராதியை தொகுத்தவர் யார்?
பீற்றர் போர்சிவல் பாதிரியார்
(32) இலங்கையில் தம் ஆட்சி காலத்தில் டச்சுக்காரர்கள் வெளியிட்ட நாணயத்தில் அச்சிட்ட எழுத்துக்கள் எவை?
வி, ஓ, ஓ, சி
(33) இலங்கையில் சர்வஜன வாக்குரிமைஎவ்வாண்டில் முதலில் உபயோகிக்கப்பட்டது?
1931 இல்
(34) கொழும்பு கண்டி புகையிரதபாதை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1867 இல்
(35) இலங்கைப்பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தர் யார்?
சேர் ஐவர் ஜெனிங்ஸ்
(36) தேசியக் கொடியில் அசோக சின்னம் பொறிக்கப்பட்டுள்ள நாடு எது?
இந்தியா
(37) ''பொஸ்ரன் தேனீர் விருந்து'' எந்த நாட்டின் சரித்திரத்துடன் தொடர்புடையது?
அமெரிக்கா
(38) எந்நாட்டின் தபால் முத்திரைகளில் அந்நாட்நாட்டின் பெயர் அச்சிடப்படுவதில்லை
இங்கிலாந்து

## பொது அறிவு இல - 01 கடந்தவார வினாக்களுக்கான விடைகள்

(1) லெனின் தேசிய நூலகம் மொஸ்கோ
(2) பிலிப்பைன்சுக்கு அருகிலுள்ள மீன்டான்யோ (சுமார் 5மைல்)
(3) வெனிசுலா (4) உரோமாபுரியிலுள்ள சென்பீற்றர்
(5) எவர்டாம் (726 அடி) (6) காட்டுக்கோழி
(7) மயில் (8) வெள்ளைக்கொக்கு
(9) நீல கொக்கு (10) கழுகு
(11) மாணிக்கவாசகர் (12) அருணகிரிநாதர்
(13) கவிதா கூர் (14) வீரமா முனிவர்
(15) அடெய்வ் கிட்லர் (16) லாங்முயூர்
(17) ஜோன் கூற்றன் பேர்க் (18) மைக்கல் பரடே
(19) ஷோர்யஸ் Sholes (20) கியூரி அம்மையார்
(21) மார்ச் 8 (22) ஏப்பரல் 7
(23) ஜுன் 5 (24) ஒக்ரோபர் 15
(25) ஒக்ரோபர் 6 (26) இங்கிலாந்து (மித் 23. 11. 97)
(27) அயர்லாந்து (28) ஜார்ஜ் வாஷிங்டன்
(29) நெப்போலியன் பானாபாட் (30) ஐரோப்பா
(31) 1976 இல் (32) உதயதாரகை 1841 இல்
(33) 1950 (34) ஆறுமுகநாவலர்
(35) 1958
(36) எத்தகைய அதிர்ச்சியையும் தாங்கவல்ல தன்மை கொண்ட இப்பெட்டி விமானம் பறக்கும் உயரம் காற்றின் வேகம் திசை என்பவற்றை ஒலிப்பதிவு செய்யும்
(37) பிகாசோ (38) டோலீறன்
(39) றேஞ்சன் (40) நீர் வெறுப்பு நோய்
(41) தயரா (42) 1. 12. 1960
(43) கெய்ஷா சிறுமிகள் (44) கங்காரு
(45) 1983 (46) 1979
(47) Human Immuno deficcency virus (48) 1957
(49) உணவு விவசாய ஸ்தாபனம்
(50) நெதர்லாந்திலுள்ள ஹேக் நகரம்

சிறை காக்குங் காப்பு
எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை

- குறள்

# வலம்புரி

## பெண்கள் செய்த குற்றம் தானென்ன

பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்கிறது தமிழ் வேதம். இந்த மண்ணிலே பதினெண்ணாயிரம் பெண்கள் விதவைக் கோலத்தைத் தழுவியிருக்கிறார்கள். பொட்டும் பூவும் இழந்து கண்கள் கொட்டும் கண்ணீர் மேலும் கடல் நீரை உப்பாக்கிக் கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் 1700, கோப்பாய் - 2500, பருத்தித்துறை 1700, உடுவில் 1700, மருதங்கேணி-25, வேலணை 375, சாவகச்சேரி 2700, பளை-225, ஊர்காவற்றுறை 550, நல்லூர் 2100, கரவெட்டி 1700, சண்டிலிப்பாய் 1400, சங்கானை 1302, தெல்லிப்பழை 500 எனும் புள்ளி விபரங்களை உடையதாக விதவைகள் இருக்கிறார்கள். உழைக்கும் கரங்களை கோரயுத்தத்தில் இழந்து பரிதவிக்கிறார்கள். இவர்களின் வாழ்வு கையேந்தும் வாழ்வாக ஆவதற்கு அவர்கள் செய்த குற்றம் தான் என்ன?

பெண்ணியம் தழைக்க வேண்டும் என்று பேசுகின்றகாலமிது. பெண்கள் பாதுகாப்பற்று கற்புச் சூறையாடப்படுகிறது- மாணவிகள், வளர்ந்தோர் என வயது வேறுபாடின்றி வாழ்வியல் சுதந்திரம் இல்லாது மறைந்து போனவர்களும் கணக்கிலடங்கா.

இன்றைக்கு செம்மணி தடயப் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபடுகின்றார்கள். அதே நேரத்தில் சாரதாம்பாள்களும் கற்பையும் இன்னுயிரையும் இழந்து கொண்டு தான் இருக்கிறார்கள். காட்டுத்தீபோல கனன்று எரியும் பெண்கள் மூச்சு நாட்டைச் சுட்டெரித்திருக்க வேண்டும். தொடரும் அநாகரிகமான கொலைகளுக்கு இறப்பவர்களின் ஆத்ம அங்கலாய்ப்பு காரணமானவர்களின் சந்நிதிகளைச் சாம்பலாக்கும் என்ற தேறுதல் எண்ணமே மிஞ்சிநிற்கிறது.

மேற்குலக நாடுகளில் அகதிகளுக்கு வாழ்க்கைக்குப் பணம் - கல்வி என பல்துறை ஆதரவு. அதுபோல 18000 விதவைகளுக்கும் - அவர்கள் பராமரிப்பிலுள்ள சிறார்களுக்கும் சீரிய வாழ்வைச் செப்பனிடுவது அரசின் கடனே-

- அன்புடன் ஆசிரியர்

---

தமிழர் கலாச்சாரப் பின்னணியில்

# மாணவர் வளர்த்தெடுக்கப்படுவது காலத்தின் அவசிய தேவையாகும்

### முன்னாள் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

தமிழர் கலாச்சார பின்னணியில் மாணவர்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது காலத்தின் அவசிய தேவையாக உள்ளது.

முன்னாள் கல்விப் பணிப்பாளரும், வலம்புரியின் பிரதம ஆசிரியருமாகிய கோ. சி. வேலாயுதம் மேற்கண்டவாறு கூறினார்.

யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலைக்கு சிறுவர் பாதுபாதுகாப்பு ங்கியமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து 1 லட்சம் ரூபா பெறுமதியான ''பாண்ட்'' வாத்தியத் தொகுதியை அன்பளிப்புச் செய்தனர்.

யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் தலைமையில் நடை பெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மாணவர்கள் ஆற்றல் வளர் ஊன்றுகோலாக நின்று நல்ல சமுதாயத்தை ஆக்கும் பணி நமதே.

தமிழரின் பாரம்பரியம் மிகத் தொன்மையானது. அவர்களது கலையாற்றல் உயிர்த் துடிப்பானவை அத்தகைய ஆற்றலுள்ள சமூகப் பின்னணியில் இருந்து வரும் வளரும் மொட்டுக்களான சிறுமியர் தங்கள் ஆற்றலை வளர்க்க வகை செய்ய வேண்டியது எங்கள்கடமையாகும்.

பாரிய இடம் பெயர்வின் போதும் அனைத்தையும் இழந்து அவலப்பட்டாலும் கற்ற கல்வியை நாம் இழக்கவில்லை.. அந்த வகைக்கு எங்கள் செல்வங்கள் கல்வியில் பெரியாராய் கலைகளிற் சிறந்தோராய் வர எம்மால் ஆன அனைத்தும் செய்தாக வேண்டும்.

லேர்ங் அடிகளார் ஐரிஸ் நாட்டு யாழ்ப்பாணத்தான் என்று பெருமை பேசியகாலப் பகுதி ஒன்று இருந்தது அதே போல் பெனிபுருணே யாழ் மண்ணின் மாணவர்களின் அறிவியல் வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்தும் இயன்றவரை செய்யும் இதயதாகம் படைத்தவர் என்றார்.

(க-1)

---

# மனிதம் என்னும் முக்கூட்டு பண்பை வெளிப்படுத்தும் இந்து தத்துவம்

மனிதம் என்பது ஒரு முக்கூட்டுப் பண்பு நல்லியல்புகள், தீய இயல்புகள், தெய்வீக இயல்புகள் என்ற முப்பண்புகளும் அவரவர் நிலைக்கேற்றபடி வெவ்வேறு விகிதாசாரத்திற் கலந்திருக்கும் முக்கூட்டு அது.

நீதி, நியாயம் நடுவு நிலைமை போன்று எல்லார்க்கும் இதமானவை நல்லியல்புகள் ஆங்காரம், அக்கிரமம் போன்று ஒருவருக்கும் இதம் அளிக்காதவை தீய இயல்புகள், அன்பு, அருள் போன்ற அதி உத்தம பண்புகள் தெய்வீக இயல்புகள் இவ் வகைகளில் ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்த பட்ச அளவாக இல்லாதவரைக் காணல் அரிது இப்படி இருத்தற்குப் பொருத்தமான காரணமும் உளதாக அறியப்படுகிறது.

அவ்வகையில் நீதி நியாயம் ஆகியன அறிவுப் பண்புகள் அறிவுமயமாயிருப்பது தான் உயிரியல்பு ஆதலால் இவைகளை உயிர்ப்பண்புகள் எனலாம். ஆங்காரம் அதிக்கிரமம் போல்வன உயிரைச் சார்ந்திருக்கும் ஆணவம், தரும் பண்புகள், ஆணவம் கன்மம், மாயை என்பவற்றுடன் சேர்த்துப் பாசம் எனப்படுதலால் இவை பாசப் பண்புகள் எனப்படலாம். இனி, அருள் ஆதியன உயிரைவிட்டு நீங்காதிருக்கும் தெய்வத்தின் பண்புகள் எனப்படலாம்.

பரந்திருக்கும் பிரபஞ்சமாகிய அண்டம் முழுவதிலும் செறிவுற்றிருக்கும் தெய்வம் (பதி), உயிர் (பசு), ஆணவம் (பாசம்) என்பவை தேகமாகிய பிண்டத்திலும் தொடர்புற்றிருப்பதன் விளைவு இது என்கிறது சைவஞானம்.

இம் மூன்றில், வாழ்வின் பெறுபேறு பாசத்திற்குச் சற்றுமில்லை; பதிக்கும் அது சற்றுமில்லை. முழுப்பேறும் பசுவாகிய உயிருக்கே. ஆதலால் இம்முப் பொருட் சேர்க்கையால் உயிருக்கே நலம் விளைவது பற்றி அறிதல் தரும்.

குறித்த மூவகைப் பண்புகளில் முற்றிலும் விரும்பத்தகாதவை பாசப்பண்புகள், சுமாராக விரும்பத்தக்கவை உயிர்ப்பண்புகள், அதிஉத்தமமாக விரும்பத்தக்கவை தெய்வப் பண்புகள்.

எனவே தீயவற்றை விட்டு மிக நல்லவற்றைப் பெறுதல் என்ற வகையில் மனிதன் தன்னிடத்திலுள்ள பாசப் பண்புகளை முதலில் மழுங்கச் செய்து உயிர்ப்பண்புகளின் விளக்கத்தில் மிளிர வேண்டும். அதனால் தொடர்ந்து உயிர்ப்பண்புகள் கீழடங்க மேலோங்கும் தெய்வப் பண்பில் மிளிரும் நிலையைப்பெறல் சாத்தியமாகும்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்னும் வள்ளுவனின் குறள், வாழ்க்கை அறங்களைச் சரிவரப் பின்பற்றுதலால் பாசப் பண்புகள் வலியிழந்துபோக உயிர்ப்பண்புகள் மேலோங்குவதன் பயனாக அனுசரிக்கப்படும் ஆன்ம சாதனைகள் மூலம் தெய்வீகநிலை கைகூடுவதையும் உணர்த்துகின்றது.

எனினும், இவ்விருத்திகள் சாதாரண நடைமுறை வாழ்க்கையளவிற் கைகூடிவிடுவதற்கில்லை. அதுசரிவரக் கைகூடுவதற்குப் பிரத்தியேகமான ஒரு சாதனம் வேண்டும். அதுவே சமயம் சைவத்தின் நோக்கும் போக்கும் இவ்வகையில் சிறந்திருப்பவையாகக்கருதப்படும்.

உயிரியக்கத்துக்கு தான தலைமை ஆகிறது. இவ்விதத்தில் உடலை இயக்கும் உயிருக்கு உயிர் சிவம் எனவும் பேசப்படுகிறது.

இனி, உயிருக்கு உயிராய் விளங்கும் இச்சிவம் உயிர் என்றுண்டோ அன்றோ உயிரிடத்தில் உள்ளது. உயிரியக்கத்துக்குச் சிவம் தலைமை ஆதலால் அது ஆண்டான் என்றும் அதன் செயற்பாட்டுக்கு அமைந்தே நிற்க வேண்டுமாதலால் உயிர் அடிமை என்றும் பெயர் பெறும். உயிர் சிவத்திற்கு இடையில் வந்த அடிமையன்று. பரம்பரை அடிமை ''என்று நீ அன்று நான் உன்னடிமை அல்லவோ'' என்ற தாயுமானவர் வாக்கு இதனையே பேசும்.

இப்பரம்பரை அடிமைத்தனத்தை தெரிவிக்கவே சிவபெருமான் சுந்தரரிற்கு அடிமை ஓலை என்ற ஆதார சாதனத்தைக் காட்டியதும், அதனை உணர்ந்த பின் சுந்தரர் 'அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன்

### எழாலையூர் இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா

சைவ நோக்கில் வாழ்க்கை லௌகிகம், ஆத்மிக என்ற இரு பகுதிகளை உடையது. லௌகிகம் என்பது சாமானிய இன்ப, துன்ப அனுபவங்களை உடைய உடலுயிர் வாழ்வு. ஆத்மிகம் என்பது அவ்வாழ்வில் இருக்கையில் விவேக புத்தியால் அறிந்து அனுசரிக்கப்படும் தெய்வீக சாதனைகளால் விளையும் ஆன்மா ஈடேற்றம்.

ஆனால், இவ்விரண்டும் இருவேறு தனியன்களல்ல. இருவேறு தலைமைகளில் நிகழ்வனவும் அல்ல இரண்டிற்கும் ஒன்றேதளம்; ஒன்றே தலைமையும் - உடலுயிர் வாழ்வு என்ற ஒரே தளத்தில் வைத்து ஒரே சிவமே உயிரின் தகைமை நிலைக்கேற்ப இரண்டையும் அவ்வப்போது வழங்குகிறது என்பது சைவத்தின் நிலை.

அதற்கு முற்றிலும் பொருத்தமானபடி தெய்வமாகிய சிவம் ஏலவே கூறிய முக்கூட்டில் தானும் ஒன்றாகி உயிருக்கு வேறாக இல்லாமல் உயிரோடியைந்திருக்கின்றது. இருந்து, உடலியக்கத்துக்கு உயிர்தலைமையாதல் போல

எனலாமே'' எனப்பாடியதும் ஆகிய வரலாற்றுண்மை நிகழ்ந்ததுமாம்.

இவ்வாறு சிவத்திற்கும் உயிருக்கும் இடையிலான இத்தொடர்பு அநாதித் தொடர்பு எனப்படும். அநாதி ஆதலால் அதற்கு அந்தமும் இல்லை. முற்குறித்த முக்கூட்டுப் பண்புகளில் தெய்வப் பண்பிலேயே முற்றுமுழுதாக மலர்ந்த சமயாசாரியர்கள் பாடும் தேவார, திருவாசகங்கள் முழுவதும், அவர்கள் இன்னமும் சிவத்தின் தொடர்பில் அதைவிட்டுப் பிரியா நிலையில் இருப்பதையே காட்டும்.

வசித்தோடு உயிருக்கிருக்கும் தொடக்கமும் முடிவுமில்லாத இவ்விலக்கணத்தையே தமது சமயத்திற்குப் பெயராகுமாறு ''சைவம்'' என வழங்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. சைவம் சிவசம்பந்தம். 'தத்திதம்' என்னும் இலக்கண அமைதியும் கூட இதற்குண்டு. திருமூலர் இவ்விளக்கத்தை சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது என விரித்துரைப்பார்;

---

## விண்ணப்பம் கோரல்

(அச்சுவேலி)

முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் தட்டச்சு சுருக்கெழுத்து, தலையலங்காரம் (பெண்களுக்குமட்டும்) ஆகிய பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை, பாடசாலை நேரங்களில் பெற்று எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன் தம்மிடம் ஒப்படைக்குமாறு மேற்படி பாடசாலை அதிபர் திருமதி. கனகராஜா தெரிவித்துள்ளார்.

(க-57)

## பட்டப்பகலில் திருட்டு

[இளவாலை]

பகல் வேளைகளில் சைக்கிள்கள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

அண்மையில் தொட்டிலடியில் துவிச்சக்கர வண்டி ஒன்று திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

[க-12]

## சோலைவரி அறவீடு

(அச்சுவேலி)

வலிகிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேச சபை உப - அலுவலகங்களூடாக அந்தந்தப் பிரதேசங்களுக்குரிய குடியிருப்பாளர்களிடமிருந்து சோலை வரி அறவிடப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரதேசங்களில் நீண்ட கால இடைவெளிக்குப் பின் தற்போது சோலை வரி அறவிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(க-14)

## வசந்தமண்டபம் புனரமைப்பு

(வரணி)

வரணி, சிட்டிவேரம்கண்ணகை அம்மன் ஆலயவசந்த மண்டப புனர் நிர்மாண வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இம்மண்டபம் பழுதடைந்திருந்தபோதும் தற்பொழுது நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-28)

## தண்ணீர்தாங்கி அமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தை பகுதியில் 7 இலட்சம் ரூபா செலவில் 10 ஆயிரம் லீற்றர் கொள்வனவு கொண்ட தண்ணீர்த் தாங்கி அமைக்கபட்டு வருகிறது.

அத்துடன் பொதுச்சந்தையின் ஆரம்ப காலக் கட்டடம் ஒன்றும் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

(க-21

## நியமனம்

(புலோலி)

வடக்கு- கிழக்கு மாகாணத்தின் வடபிராந்திய பிரதிப் பிரதம கணக்காய் வாளராக இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர் திரு. சிதம்பரப்பிள்ளை சண்முகம் வடக்கு-கிழக்குமாகாண ஆளுனரால் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளனார்.

(க-52)

## இன்றைய சிந்தனை

காலமெனும் ஆழ்கடலில் நாம் பயணம் செய்வதற்குதவும் கலங்கரை விளக்கம் நல்ல புத்தகங்களே

# மேயர் யார் என்பது தொடர்பாக கூட். பொதுச்சபை முடிவெடுக்கும்

## பிரதி மேயர் ரவிராஜ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் மேயரை நியமிப்பது என்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்பான கடமையாகும். கொழும்பில் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளதமிழர்விடுதலைக் கூட்டணியினரின் பொதுச் சபையே யார் மேயர் என்ற முடிவை எடுக்கும். வீணாக எவரும் இந்த விடயத்தில் குழப்பமடைய வேண்டாம்.

நேற்று நடைபெற்ற யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் யாழ்.மாநகரசபைப் பிரதி மேயர் என்.ரவிராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.மாநகர சபைக் கூட்டம் நேற்று நடைபெற்ற போது ஈ.பி.டி.பி.,புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புக்களைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்கள் யார் மேயர் என்று கேட்டிருந்தனர். அப்போதே பிரதி மேயர் ரவிராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.மாநகர சபையின் மேயராக கூட்டணி உறுப்பினர் செ.கந்தையனை தேர்தல் ஆணையாளர் மேயராக நியமித்துள்ளாரே என்று இவர்கள் கேட்டபோது:

வாக்கு எண்ணிக்கையின் படி தற்போது செ. கந்தையனை மேலதிக தேர்தல் ஆணையாளர் நியமித்துள்ளார். ஆனால் அவரும் கட்சி எடுக்கும் முடிவையே எடுப்பார். நாம் கட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றோம். எனவே மேலதிக நியமனம் செய்வது கட்சியின் வேலையாகும்.

மறைந்த மேயர்கள் திருமதி சறோஜினி யோகேஸ்வரன், பொன். சிவபாலன் ஆகியோரின் மறைவுக்குப் பின்னர் பாதுகாப்புக் காரணங்களால் அன்றைய காலகட்டத்தில் எமது கட்சி உறுப்பினர்கள் பலர் தமது பதவிகளை இராஜினாமாச்செய்து வந்தனர். அப்போது கட்சி என்னை பிரதி மேயராக நியமித்தது. மேயர் சிவபாலனின் மறைவுக்குப் பின் பதில் மேயராக நான் பணியாற்றி வருகின்றேன். (வ)

**மல்கம்...**

நாளை சனிக்கிழமை லண்டன் செல்லவுள்ளனர்.

இவர்கள் லண்டனில் தங்கியிருக்கும் காலங்களில் இலங்கைக்கு உதவிவழங்கும் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து இலங்கையினதும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைவரம் குறித்துப் பேசவுள்ளனர்'

இலங்கை இனப் பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கி வரும் இவர்களது லண்டன் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர் (வ)

**சமாதானத்துக்கான...**

ளுக்குப் பின் ஒரு திருப்பு முனையில் வந்து நிற்கின்றோம். சமாதானத்துக்கான அறிகுறி ஒன்று தென்படுவதாகவும்கருதுகின்றேன்.

சகல கட்சிகளும் சகல தரப்புகளும் ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் சமாதானம் மலரும். சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு இல்லாமல் சமாதானத்தைப் பெற முடியாது. இது வரலாறு தந்த உண்மையும், பாடமுமாகும். முன்னணி பௌத்த தலைவர்களினதும் கிறிஸ்த்தவ தலைவர்களும் மனப்பூர்வமான உழைப்பும் ஒத்துழைப்பும் சமாதானம் மலர உண்டு என்பதை இங்கு பெரிதும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (வ)

**ஜனாதிபதி...**

அமைக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிப்பு, பிரதமரை பிரதானமாக கொண்ட நிறைவேற்று அதிகார ஆட்சி முறை சகல இனத்தவரினதும் ஒத்துழைப்

**நேற்றைய...**

சபை உறுப்பினர்கள் பதினொரு பேர் சமூகமளித்திருந்தனர்.

கூட்டம் ஆரம்பமானபோது படுகொலை செய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் கங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலத்திற்கு அஞ்சலி செலுத்தப் பட்டது.

சபை உறுப்பினர்களால் சென்ற கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வேலைத் திட்டங்கள் குறித்து சபையில் ஆராயப்பட்டது. அச்சமயம் சபையில் பெரும் அமளி துமளியுடன் குழப்பமும் ஏற்பட்டது.

ஈ.பி.டி.பி. உறுப்பினர் வி.அன்ரன் சிவலிங்கம் பிரதி மேயருடன் கதைத்த முறை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் ஆட்சேபனை விதித்து இருதரப்பினரிடையேயும் காரசாரமான வாக்குவாதம் இடம் பெற்றது. (வ-7)

**இராணுவ---**

காரியுமான மேஜர் ஜெனரல்

## இன்று இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று காலை 10.00 மணியளவில் மேற்படி கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கே. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பொறியியலாளர் கே, துரைராஜா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார், (ந)

★ ★ ★

சாவகச்சேரி இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் க. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கரும்,சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் .கு. பிறேம்காந்தனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (28)

## கண்டெடுக்கப்பட்டது

அரியாலை புகையிரத வீதியைச் சேர்ந்த பாலசிங்கம் விக்கினேஸ்வரன் என்பவரின் விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.

## கட்சித்தலைமையகத்தில்நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை ஐ. தே. க மாற்றுக்குழு முடிவு

(கொழும்பு)

பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற வேண்டிய ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றால் அதில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவை ஐ. தே. க. மாற்றுக் கொள்கை அணியினர் எடுத்துள்ளனர்.

இம்முடிவிற்கமைய நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் குழுக் கூட்டத்திலும் இம்மாற்றுக் குழு கலந்துகொள்ளவில்லை.

நாம் இப் பாராளுமன்றக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது கட்சியின் ஏனைய எம். பிக்கள் எங்களை அச்சுறுத்தியதுடன் தகாத வார்த்தைகளாலும் தூஷித்தார்கள். இதனால் தான் நாம் இம்முடிவைஎடுத்தோம் என இலாகாப் பொறுப்பற்ற அமைச்சர் நந்தாமத்யூ தெரிவித்தார்.

## கே.கே.எஸ்.வீதி பூநாறி மரத்தடியில் இ. போ. ச. பஸ் வண்டிகள் ஒன்றுடன்ஒன்று மோதியது!

[யாழ்ப்பாணம்]

இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான இரண்டு பஸ்வண்டிகள் காங்கேசன்துறை வீதி பூநாறி மரத்தடியில் நேற்றுக்காலை மோதியதில் பஸ் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளானார்.

நேற்றுக்காலை 8.00மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸும் இளவாலை பஸ் வண்டியுமே ஒன்றுடனொன்று மோதிக் கொண்டன.

இளவாலை பஸ்வண்டி பூநாறி மரத்தடியில் வீதியிலிருந்து விலகி வேலியொன்றுடன் மோதி தரித்துநின்றது இந்த இடத்தில் பாடசாலை பிள்ளைகள் அதிகமாகநின்று பஸ் ஏறுவது வழக்கம். சம்பவம் நடைபெற்ற பொழுது காலை 8மணியாக இருந்ததால் பாடசாலைப் பிள்ளைகள் அதற்கு முன்னரே பாடசாலை பஸ் வண்டிகளில் சென்றதால் பெரிய உயிர்ச்சேதம் தவிர்த்துக்கொள்ளப்பட்டதாக அப்பகுதி மக்கள் பேசிக்கொண்டதாக தெரியவருகிறது இம் மோதல் சம்பவத்தினால் சுமார் பத்து நிமிடங்கள் வரை அப்பகுதி வாகனப் போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

இ. போ.சபை உயரதிகாரிகள் ஸ்தலத்துக்கு வந்த பின்பே பஸ் வண்டிகள் எடுக்கப்பட்டன. (வ)

## வன்னியில் உணவுப்பொருட்கள் தட்டுப்பாடு விலை அதிகம்

(வவுனியா)

வன்னியில் உணவுப் பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதுடன் அத்தியாவசிய பண்டங்களின் விலையும் அதிகரித்துள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒருகிலோ சீனி 60 ரூபாவாகவும். ஒரு கிலோ கோதுமைமா 40ரூபாவாகவும், ஒரு கிலோ அரிசி 40 ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இவற்றைவிட குழந்தைப் பிள்ளைகளுக்கான பால்மாவுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

**அரசு---**

தாங்கும் அஜித் போயாகொட இத்தகவலை வெளியிட்டதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

அரசாங்கத்தின் மேற்படி முடிவை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் தமக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்ததை தொடர்ந்து உண்ணாவிரதிகளினதும் உறவினர்களினதும் மத்தியில்

**யாழ் கடலில்...**

ரன் (வி.கே. ஜெகன்) நேற்று இரண்டாம் கட்டமாகக் கடற்படை உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அச்செழுவிலுள்ள 513வது படைப்பிரிவின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில் 51வது படைத்தளபதி காமினி ஜெய

மாக கொண்ட நிறைவேற்று
அதிகார ஆட்சி முறை சகல
இனத்தவரினதும் ஒத்துழைப்
புடன் பிரதமர் தெரிவு சிறப்
புரிமையை நீக்கிய நிறை
வேற்று அதிகார முறையே
இருக்க வேண்டும். 1972ஆம்
ஆண்டு அரசியல் யாப்பி
லிருந்து நீக்கப்பட்ட சோல்
பரி யாப்பின் 20வது சரத்தை
மீண்டும் அரசியல் யாப்பில்
சேர்த்தல், மக்களின் சிவில்
உரிமையை பலப்படுத்தக்
கூடிய ஜனநாயக அதிகார
முறையொன்றை ஏற்படுத்தல்
என்பனவே அவ் ஆறு அம்சங்
களாகும். (4)

ஸ்ரீ செல்வா
யாழ். ஸ்ரான்லி வீதி,
காலை 10-30 பி.ப 2.30
அர்ஜுன், ரம்பா
நடித்த
'சுதந்திரம்'
(புதிய வெளியீடு)
CD பிரதி
(00115)

## இராணுவ---

காரியுமான மேஜர் ஜெனரல்
ஜனக பெரேரா வன்னிப்
பகுதித் தளபதி மேஜர் ஜென
ரல் நீல் டயஸ் ஆகியோருக்கே
பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்
ளது. (வ-4)

## ஐ. தே. கட்சி---

வுக்கு அனுப்பி வைக்கப்பட்
டுள்ளன.

அரசியல் அமைப்பு சீர்
திருத்தக்கோரிக்கைகள் வரு
மாறு;

★ பிராந்திய அலகுமுறை
யை ஏற்றுக்கொள்ளமாட்
டோம்.

★ வடக்குக் கிழக்குக்கு
இடைக்கால நிர்வாக சபை
நியமித்து அதன்பின் பேச்சு
வார்த்தை ஆரம்பிக்கவேண்
டும்

★ சுயாதீன பொலீஸ்
ஆணைக்குழு நியமித்தல்.

★ சுயாதீன, தேர்தல்
ஆணைக்குழு நியமித்தல்.

★ சுயாதீன பொதுசன
சேவை ஆணைக்குழு நிய
மித்தல்

போன்ற அம்சங்கள் அடங்
கிய யோசனைகளை நேற்று
ரணில் விக்கிரமசிங்கா ஜனா
திபதிக்கு அனுப்பிவைத்தார்.
(வ)

தில் வந்து அடையாள அட்
டையைப் பெற்றுக்கொள்ள
லாம்.

## கடற்றொழில்---

களை இன்று காலை 9-00
மணிக்கு ஈ. பி. டி பீ யின்
யாழ். தலைமையலுவலகத்
திற்குச் சமூகங் கொடுக்கு
மாறு யாழ். மாவட்ட பாரா
ளுமன்ற உறுப்பினர் வி. கே.
ஜெகன் கேட்டுள்ளார். (ந)

## நீர்கொழும்பில்---

துகள்கள் என்பன நேற்று
இரவு கைப்பற்றப்பட்டது.

வெடிமருந்துப் பொருட்
கள் கண்டுபிடிக்கப்பட்ட வீட்
டின் உரிமையாளர் ஒருவர்
கைது செய்யப்பட்ட பின்பே
இவர் கைது செய்யப்பட்
டார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த
சாந்தறொபேட் புஸ்பகுமா
ரன்(வயது23)என்னும் இளை
ஞர் கைது செய்யப்பட்டுள்
வார்.

கைது செய்யப்பட்ட சாந்த
றொபேட் புஸ்பகுமாரன்
மட்டுநகரைச் சேர்ந்தவர்
என்றும் இவர் வர்த்தக முகா
மைத்துவம் கற்கும் போர்வை
யில் நீர்கொழும்புக்கு வந்
தார் என்றும் 1998 ஆம்
ஆண்டு தொடக்கம் கொச்சிக்
கடையில் இருந்தவர் என்றும்
அவற்றை நிரூபிக்க ஆதாரம்
இருப்பதாகவும் தெரிவிக்கப்
படுகின்றது. (வ)

உண்ணாவிரதிகளினதும் உற
வினர்களினதும் மத்தியில்
அதிர்ச்சியும் பரபரப்பும் ஏற்
பட்டதாகவும் தெரிவிக்கப்
படுகிறது.

உண்ணாவிரதிகளின் விடு
தலை தொடர்பாக தாம்
முன்பு ஜனாதிபதிக்கு பக்ஸ்
செய்தி அனுப்பியதாகவும்
அதற்கு பதில் ஏதும் தரப்பட
வில்லை எனவும் கைதிகள்
விடுதலையில் அரசுக்கு
அக்கறையில்லை என
வும் போயாகொடவின்
மனைவி தெரிவித்துள்ள
அதேவேளை கைதிகளும்
அரசுக்கு தம்மில் அக்கறை
யில்லையென்றும் தெரிவித்
துள்ளனர்.

இதேவேளை புதுக்குடி
யிருப்பு வைத்தியசாலையில்
அனுமதிக்கப்பட்டிருந்த
கைதியான உபாலி சோம
பால உடல் நிலை சற்றுத்
தேறிய நிலையில் நேற்று
உண்ணாவிரத மண்டபத்
துக்கு அழைத்துவரப்பட்டுள்
ளார்.

உண்ணாவிரதிகளின் உற
வினர்களை இன்று கொழும்
பிற்கு அழைத்து வருவதற்
கான ஏற்பாடுகள் செஞ்சிலு
வைச்சங்கத்தால் செய்யப்
பட்டதாக சர்வதேச செஞ்
சிலுவைச் சங்க மல்லாவி
உபஅலுவலகப் பிரதிநிதி செல்வி
வலேரியா தெரிவித்ததாகவும்
புலிகளின் குரல் வானொலி
மேலும் தெரிவித்தது. (4)

பேச்சுவார்த்தையில் 51வது
படைத்தளபதி காமினி ஜெய
சுந்தர. மற்றும் கட்டளைத்
தளபதிகள் ஈ.பி.டி.பியின்
வலிகாமம் மேற்குப் பகுதி
பிரதேசசபைத் தலைவர்
திரிலோகநாதன் ஆகியோர்
கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது
கடற்றொழிலாளர்கள் கட
லில் இறங்கி மீன்பிடிப்பதற்கு
ஏற்கனவே இருந்த வரைய
றைகளுடன் அனுமதிப்ப
தென தீர்மானிக்கப்பட்டது.

எனினும் இது விடயத்தில்
கடற்றொழிலாளர் சங்கங்
களின் பிரதிநிதிகளுக்கு இரா
ணுவ கடற்படைப் பிரிவினர்
உரிய உத்தரவாதம் அளிப்ப
துடன் வரையறை பற்றிய
விளக்கங்களையும் தெளிவு
படுத்த வேண்டுமென ஜெகன்
எம்.பி வலியுறுத்திக் கொண்
டார்.

இதற்கமைய நாளை சனிக்
கிழமை இராணுவ, கடற்
படை அதிகாரிகளுடன் கடற்
றொழிலாளர் சங்கப் பிரதி
நிதிகளும் கலந்து கொள்ளும்
சந்திப்பொன்றுஇடம்பெறும்.
இதற்கான ஒழுங்குகளை ஈ.
பி.டி.பியின் யாழ். தலைமை
அலுவலகம் மேற்கொண்டுள்
ளது.

இச்சந்திப்பின் போது
ஞாயிறு அல்லது திங்கட்
கிழமை மீன்பிடிக்க அனும
திக்கப்படலாம் என நம்பப்
படுகிறது. (ந)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்
தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்
எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்
2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு
வெளியிடப்பட்டது.